செய்தி வெளியீடு எண்: 389 நாள் : 07.08.2015

<u>பத்திரிக்கைச் செய்தி</u>

குடும்ப அட்டையில் மாற்றங்கள் செய்தல் மற்றும் பொது விநியோக திட்டத்தில் காணப்படும் குறைபாடுகள் குறித்து தமிழகம் முழுவதும் வட்டங்கள் தோறும் மக்கள் குறைதீர் கூட்ட முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்படும் என அரசு அறிவித்துள்ளது. அதன்படி உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, சென்னையில் 16 மண்டல பகுதிகளில் மக்களின் குறைகளை கேட்டு தீர்வு காணும் பொருட்டு இணைப்பில் குறிப்பிட்டுள்ள மையங்களில் ஆகஸ்ட் 2015 மாதத்திற்கான மாதாந்திர பொது விநியோகத் திட்ட குறைதீர் கூட்ட முகாம் 08.08.2015 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் பொது விநியோக திட்டத்தைச் செயல்படுத்தும் உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, கூட்டுறவு துறை மற்றும் தமிழ் நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தைச் சார்ந்த அலுவலர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். அப்பகுதியை சுற்றி உள்ள குடும்ப அட்டைதாரர்கள் குடும்ப அட்டைகளில் பெயர், முகவரி மாற்றம், திருத்தம் மற்றும் பொது விநியோக திட்ட கடைகளின் செயல்பாடுகள் குறித்தும் பொது விநியோக திட்ட பொருள்கள் கிடைப்பது குறித்தும் தனியார் துறையில் சந்தையில் விற்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகள் வாங்கும் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது அல்லது குறைகள் இருப்பது குறித்தும் தங்களுக்கு குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை இக்கூட்டத்தில் தெரிவித்தால் குறைகளை விரைந்து தீர்வு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். சென்னையில் உள்ள 16 மண்டல பகுதியில் உள்ள குடும்ப அட்டைதாரர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | மண்டலம் | கூட்டம் நடைபெறும் இடங்களின் பெயர் |
|---|---|---|
| 1 | சிதம்பரனார் | ஹ.சு.ஊ. மேல்நிலைப்பள்ளி, 38, சைவமுத்தையா முதலி தெரு, முத்தியால் பேட்டை, சென்னை–600 001. (மாடிபூங்கா அருகில்) |
| 2 | இராயபுரம் | தனலெட்சுமி நடுநிலைப்பள்ளி, வேலாயுதபாண்டியன் தெரு, பழைய வண்ணாரப்பேட்டை, சென்னை–600 021. (கலந்தர் மதினா அருகில்) |
| 3 | பெரம்பூர் | சென்னை நடுநிலைப்பள்ளி, 48, மூர்த்திங்கர் தெரு, வியாசர்பாடி, சென்னை 600 039. (டாக்டர்.அம்பேத்கார் அரசினர் கலைக்கல்லூரி அருகில்) |
| 4 | அண்ணாநகர் | சென்னை நடுநிலைப்பள்ளி, எண் 3, சுப்புராயன் முதல் தெரு, நம்மாழ்வார் பேட்டை, சென்னை 600 012. (நம்மாழ்வார் பேட்டை மார்க்கெட் அருகில்) |
| 5 | அம்பத்தூர் | அமுதா மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளி, 3வது மெயின் ரோடு, முகப்பேர் மேற்கு, சென்னை–600 037. முகப்பேர் மேற்கு பஸ் டிப்போ அருகில்) |

| | | |
|---|---|---|
| 6 | வில்லிவாக்கம் | நன்னல மன்றம், ஐஊகு வடக்கு காலனி, சென்னை–600 038. (பிள்ளையார் கோயில் அருகில்) |
| 7 | திருவொற்றியூ ர் | குருமூர்த்தி வித்யாலயா உயர்நிலைப்பள்ளி, 223, ஆர்.வி.நகர் முதல் பிரதான சாலை (பள்ளி தெரு) ஆர்.வி.நகர், கொடுங்கையூர், சென்னை–600 118. (ஆர்.வி.நகர் ஐயப்பன் கோயில் அருகில்) |
| 8 | ஆவடி | அரசு மேல்நிலைப்பள்ளி, தெற்கு பஜார், தண்டுரை, சென்னை–600 072. (ரயில்வே நிலையம் அருகில்) |
| 9 | தி.நகர் | சென்னை உயர்நிலைப்பள்ளி, எண் 67, ரெங்கராஜபுரம் பிரதான சாலை, சென்னை–24 (ரெங்கராஜபுரம் ஐந்து விளக்கு அருகில்) |
| 10 | மயிலாப்பூர் | சாந்தோம் மேல்நிலைப்பள்ளி, எண் 143–ஏ, சாந்தோம் நெடுஞ்சாலை, மயிலாப்பூர், சென்னை–600 004. (சாந்தோம் சர்ச் அருகில்) |
| 11 | பரங்கிமலை | விக்னேஷ் மஹால், நல்லதம்பி ரோடு, (நாகாத்தம்மன் கோயில் எதிரில்) பம்மல், சென்னை – 600 075. |
| 12 | தாம்பரம் | பீர்க்கன்காரணை பேரூராட்சி அலுவலகம், கலைஞர் நெடுஞ்சாலை, பீர்க்கன்காரணை, சென்னை–600 063. (சூராத்தம்மன் கோயில் செல்லும் வழி) |
| 13 | சைதாப்பேட்ை ட | பல்நோக்கு கட்டிடம், பால்மோர் தெரு, மேற்கு மாம்பலம், சென்னை – 600 033. |
| 14 | ஆயிரம்விளக் கு | புனித பிரான்சிஸ் சேவியர் நடுநிலைப்பள்ளி, 153, டி.டி.கே. சாலை, ஆழ்வார்பேட்டை, (அடையார் கேட் ஹோட்டல் அருகில்) சென்னை– 18. |
| 15 | சேப்பாக்கம் | சென்னை தொடக்கப்பள்ளி, 126, டாக்டர் பெசண்ட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை–14 (ஐஸ் ஹவுஸ் காவல் நிலையம் அருகில்) |
| 16 | சோழுங்கநல்லு ார் | கோவிலம்பாக்கம் சமுதாய நலக்கூடம், எண் 4, எஸ்.கொளத்தூர் மெயின் ரோடு , கோவிலம்பாக்கம், சென்னை–129 (கோவிலம்பாக்கம் பேரூராட்சி அலுவலகம் அருகில்) |

முதன்மை செயலாளர்/
ஆணையாளருக்காக

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**